நேபாளத்தில் அமெரிக்க எதிர்ப்பு!

. REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. கழக இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆடி 25உ திங்கள் (9—8—54) வெளியூர்: ஆடி 29உ செவ்வாய் (10—8—54)	மலர்: 2 இதழ்: 48

இந்திரனே! சந்திரனே! என்று புகழ்வர்

இந்திர, சந்திரனையே குறைகூறுவோர் நாம்

நமக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம்

பொதுச் செயலாளர் அண்ணா விளக்கம்

"மற்றக் கட்சிகளெல்லாம் மக்களை, இந்திரனே! சந்திரனே! என்று புகழ்ந்து பேசி மகிழ்விப்பார்கள்; நாங்களோ, இந்திரன் ரிஷி பத்தினியைக் கெடுத்தவன், சந்திரன் குரு பத்தினியைக் கெடுத்தவன் என்று கூறி, அந்தத் தேவர்களையே கண்டித்துப் பேசுபவர்கள்; நாங்கள் மக்களை மகிழச் செய்வதற்காக, அவர்களைப் பாராட்டிப் பேசிவிட்டுப் போகிறவர்கள் அல்ல, உள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டுபவர்கள்."

"நாட்டு மக்கள் நாலாயிரம் சாதிகளாய் சிதறுண்டு கிடப்பதையும், மதமாச்சரியங்களில், மூட மௌடீக நம்பிக்கைகளில் சிக்கிச் சீரழிந்து போவதையும், அந்த மதங்களும், அவை போதிக்கும் கடவுள்களும் இந்த நாட்டில் உண்டுபண்ணிய வறுமையையும், அந்த வறுமையினால் மக்களிடை ஏற்பட்ட வாட்டத்தையும், அந்த வாட்டத்தைப் போக்க வழி இல்லாத அட்டகாச அரசாங்கத்தையும், அந்த அரசாங்கத்தை அனுமதித்த மக்களின் அரசியல் அறியாமையையும் இடித்துக் காட்டி மக்களிடை உள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டி, டாக்டர்களாய் எச்சரிக்கைக்காரர்களாய் திராவிடர் இயக்கத்தவரான நாங்கள் இருக்கிறோம். இந்தக் குறைகள் நீங்கப்பட, பரிகாரம் காணுமாறு மக்களை வேண்டுகிறோம்."

—என்று, தாம்பரத்தில் 8—8—54 மாலை நடைபெற்ற, தாம்பரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுப் பேசினார்.

8—8—54ல், தாம்பரம் தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தாம்பரம் தி. மு. கழகச் செயலாளர் ஆதி அனைவரையும் வரவேற்றார்.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமை ஏற்று இன்னிசையுடன் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து தோழர் முனைவர் ஆர். எஸ். பாண்டியன் பேசியதும், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் தோழர் சி. வி. இராசகோபால் சிறிது நேரம் பேசினார்.

இறுதியாக தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் சீரிய கருத்துக்களை மிகச் சிறந்த முறையில், விளக்கி ஒன்றரை மணி நேரம் கருத்துரையாற்றினார்கள்.

கூட்டம், சென்னை தாம்பரத்தைச் சார்ந்த ராமசாமி பெரியார் நகர் அண்ணாசாமி மார்க்கட் மைதானத்தில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்தோடு கூடியிருந்தனர். பொதுச் செயலாளரின் லட்சிய விளக்கச் சொற்பொழிவு கூடியிருந்தவர்க்கு வழிகாட்டும் ஒளி விளக்காய் அமைந்தது என்றால், அது மிகையன்று!

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

கூட்டத் துவக்கத்தில் வளர் இசைப் பண் பாடினர்.

பொதுச் செயலாளருக்கு பல மன்றங்கள், தொழிலாளர் சங்கங்கள், கழகங்கள் ஆகியவை சால் மலர் மாலைகளும், கைத்தறி ஆடையும் அணிவிக்கப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

ஐசன்ஹோவர், டல்லஸ் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டன!

'யாங்கியே! திரும்பிப்போ!'

காட்மண்டுவில் ஆர்ப்பாட்டம்!

உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுகிறது என்று நேபாளத்தில் நீண்ட நாட்களாக இருந்துவந்த எதிர்ப்பு இப்போது மிகவும் வலுப்பெற்று காணப்படுகிறது.

"அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக" என்ற குரல் நேபாளத்தின் பல பகுதிகளில் இப்போது ஒலிக்கத் துவங்கிவிட்டது.

காட்மண்டு, ஆக. 8—

நேபாளத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் நடத்தும் சதிச் செயல்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த கூட்டத்தினர் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், இராஜாங்க அமைச்சர் ஜான் பாஸ்டர் டல்லஸ் ஆகியோரின் உருவங்களை எரித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க அதிபர் இருவரின் கொடும்பாவிகளையும் எரிப்பதற்கு முன்னர் காட்மண்டுவின் எல்லாப் பகுதிகளிலும் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த ஜன அதிகார், சுராஷ்கா சமிதி என்ற கட்சியினருக்கு நேப்பாள கம்யூனிஸ்டு கட்சியின் காட்மண்டு கிளையும், கிசான் சங்கமும், சில மாணவர் சமூக அமைப்புகளும் ஆதரவு தந்தன என்று தெரிகிறது.

கொடும்பாவி ஊர்வலம் முடிவடைந்த இடத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொதுக் கூட்டமொன்றை நடத்தினர்.

அக்கூட்டத்தில் நேபாளத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட உதவ வேண்டுமென்று இந்தியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

ஐசன்ஹோவர், டல்லஸ் ஆகியோரின் கொடும்பாவிகளுடன் ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்களில் மட்டுமின்றி, சிறு தெருக்களிலும் சென்றதாம்; ஊர்வலத்தினர் "யாங்கிகளே! திரும்பிச் செல்லுங்கள்!" "அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக!" என்று முழக்கமிட்டனர்.

நேபாளத்தில் உள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தின் முன்பு ஆயுதம் தரித்த காவல் படையினர் நின்று கொண்டிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் தூதுவராலயம் அருகே செல்லவில்லை.

பிரெஞ்சிந்திய பிரச்சினை:

வாக்கெடுப்பு இல்லை?

அதிகார மாற்றத்திற்கு உறுதி — நஷ்ட ஈடு தேவையாம்?

பிரெஞ்சிந்தியத் திட்டுகளின் எதிர்காலம் பற்றி எந்த விதமான வாக்கெடுப்பும் நடைபெறாது என்று பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்சுக்கு நெருங்கிய இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளனவாம்! அதிகார மாற்றத்தைப் பூர்த்தி செய்ய மூன்று மாத காலம் தேவை என்று பிரெஞ்சு சர்க்கார் விரும்புகின்றனராம்.

மேலும் பிரெஞ்சுக்காரர்கள் பிரெஞ்சிந்தியாவில் தாங்கள் செலவழித்துள்ள பணத்திற்கு நஷ்டஈடு கேட்கிறார்களாம்!

அறிவிப்பு வெளியாகும்

பிரெஞ்சிந்திய பேச்சு வார்த்தைகளில் அடுத்த 24 மணி நேரத்திற்குள் நல்லதோர் முடிவு ஏற்படும் என்று தெரிகிறது.

இதற்கிடையில், புதுவையில் அதிகாரிகளும், அவர்கள் குடும்பத்தினரும் வெளியேற ஏற்பாடுகள் முற்றுப்பெற்று விட்டனவாம். இவர்களுக்கான கப்பல் 12-ம் தேதியன்று புதுவையில் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகார மாற்றத்திற்கு ஒரு சில அதிகாரிகளே இருப்பார்களாம்

தி. மு. க. வீரர்களுக்கு 3 மாத சிறை

(:)

அடையாள மறியல் வழக்குகளில் தீர்ப்பு

நாகர்கோவில், செங்கோட்டை அறப்போர் விவரங்கள்

நாகர்கோவில், ஆக. 6—

திரு—தமிழர் அறப்போரில் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அடையாள மறியல் செய்த 10 தி. மு. கழகத் தோழர்களுக்கு தலா மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மற்றும் பத்து தோழர்கள் ஒரு மாத சிறைத் தண்டனை அடைந்தனர்.

ஆகஸ்டு 6-ம் தேதியன்று நாகர்கோவில் நீதிமன்றத்தில் மறியல் செய்த முதல் படையினரான ஜி. குமரேசன், என். கோபாலகிருஷ்ணன், ஆர். பரமசிவம், பி. எஸ். பிச்சாண்டி, பி. கணபதி, ஆர். சுப்பையா, எஸ். நல்லபெருமாள், இரா. பெருமாள், ஆர். சொக்கலிங்கம், சுந்தர்ராஜ் ஆகிய பத்து தோழர்களுக்கும் நாகர்கோவில் 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட், திரு. குமாரதலா ஒரு வாரம் சிறைத் தண்டனையும், ரூ. 50 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் மூன்று வார சிறைத் தண்டனையும் விதித்தார். இப்படைக்கு தோழர் ஜி. குமரேசன் தலைமை வகித்தார்.

அறப்போரில் கலந்து கொண்ட இரண்டாவது படையினரான தோழர்கள் பி. ராமச்சந்திரன், கே. ஆறுமுகம், எஸ். சுப்பிரமணியம், ஈ. சுடலையாண்டி, என். சுவாமிநாதன், ஆர். ரவீந்திரன், சி. இராமச்சந்திரன், பி. சங்கரன், ஏ. இராசா, கே. காளிமுத்து ஆகியோருக்கு முதல்வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. பரமேஸ்வரன் பிள்ளை தலா ஒரு வார சிறைத்தண்டனையும், ரூ. 200 அபராதமும், அபராதம் கட்டத்தவறினால், மூன்றுமாத சிறைத்தண்டனையும் அளித்தார். இரண்டு தண்டனைகளையும் ஒரே காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டது. இந்தத் தோழர்கள் அனைவரும் திருவனந்தபுரம்

(4-ம் பக்கம் பார்க்க)

மொராக்கோ கலகம் வலுக்கிறது

மீண்டும் 11 பேர் பலி!

பிரெஞ்சு மொராக்கோவின் நகரான போர்ட் லியாட்டியில் நடைபெற்ற கலகத்தில் 11 பேர் கொலை செய்யப்பட்டனர் என்றும், 30 பேர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.

கலகக்காரர்கள் சினிமா கொட்டகை ஒன்றைக் தீயிட்டனர்.

கலகக்காரர்கள் இரு ஐரோப்பியப் பெண்களின் கழுத்தை வெட்டிக் காயப்படுத்தியதுடன், 89 வயதுள்ள பிரெஞ்சு மாது ஒருவரையும், அவரது 19 வயதுள்ள மகனையும் கோடரி கொண்டு வெட்டி கொலை செய்திருக்கின்றனர்.

நகரை விட்டு வெளியேறுமாறு பிரெஞ்சுக்காரர்களுக்கு சர்க்காரால் உத்திரவிடப்பட்டிருக்கிறது.

மொராக்கோ கலகம் உலக அமைதிக்கு ஆபத்தானது என்று அரபு லீகின் காரியதரிசி ஐ. நா. சபைக்குத் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—8—54 திங்கள்

கம்பனுக்கு யோகம்!

கம்பனுக்கு அடிக்குது யோகம்!

ராமகாதை பாடி, மோக்ஷ கதிக்கும் புண்ணியம் தேடிக் கொடுக்க எழுதுகோலை எடுத்த கம்பனின் புகழ் பாட புது வீரர்கள் இன்று தமிழகத்தில் கிளம்பி இருக்கின்றனர்!

மனிதனுக்கு மனிதன் இருக்கும் பேதா பேதத்தை விளக்கி, 'விதியென்று கூறாதே; அது முதலாளிகள் செய்த சதி,' என்று முழக்கமிட்ட பரம்பரையினர் எனக் கூறிக்கொள்ளும் இந்த நாட்டு கம்யூனிஸ்டுகள். இன்று கம்பன் புகழ்பாட ஆரம்பித்திருக்கின்றனர்.

விழாக்களில் அவனுடைய நூலில் கண்ட மார்க்சீயத்தை விளக்கினர்!

கூட்டங்களில் அவன் கொண்டிருந்த மறுமலர்ச்சி எண்ணங்களை விளக்கினர்!

எது கூறினாலும் மக்கள் ஏற்றுக்கொள்வர் என்ற நம்பிக்கையில், கடைசியில் அவன் பெருமை பாடி, புத்தகமே வெளியிட்டுவிட்டனர்!

விழாக்களில் பேசுவதும், கூட்டங்களில் சொற்பொழிவாற்றுவதும், நூல்கள் எழுதி வெளியிடுவதும் வெறும் அரசியல்வாதிகள் செயலன்றோ?

இந்தப் புதுப் பணியில் ஈடுபட்ட கம்யூனிஸ்டுகள், எம். எல். ஏ.-க்களாயிற்றே! ஆகவே, தங்களுக்குக் கம்பன் மீது ஏற்பட்டிருக்கும் திடீர் பக்தியை, அசெம்பிளியிலும் காட்டியிருக்கின்றனர்!

சென்ற வெள்ளிக்கிழமையன்று சென்னை சட்டசபையில் வெகு ருசிகரமான விவாதம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

திருவள்ளுவர் தினம் கொண்டாடும்போது சென்னை ராஜ்ய கல்வி அதிகாரி பள்ளிக்கூடங்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருந்தாராம். இதைப் பற்றிய விவாதம் நடந்தபோது, வள்ளுவர் தினம் கொண்டாட, குறிப்பிட்ட நாள் எதுவும் கூற வரலாற்றுச் சான்று இல்லை என்றும், ஆகவே ஏதாவதொரு நாளை குறிப்பிட்டு, அந்தந்த பள்ளிக்கூடங்களே விழாக் கொண்டாடலாம் என்றும் கல்வி மந்திரியார் கூறியிருக்கிறார்.

மேலும் இந்த விவாதம் தொடர்ந்தபோது, திருவள்ளுவர் பிறந்த நாள் என்று, குறிப்பிட்ட நாள் ஒன்றைப் பொது விடுமுறையாக விடமுடியாதென்றும், இதுபற்றி நிறைய ஆராய்ச்சிகள் நடைபெறும் அளவுக்குக் கருத்து வேற்றுமைகள் காணப்படுகிறது என்றும் சர்க்கார் சார்பில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

வரலாற்றுச் சான்றுகள் இல்லை என்பதால் மட்டுமே மக்கள் வாழ்விற்கு ஒப்பான கருத்துக்களை பலவற்றையும், அழியாத, யாராலும் அழிக்க முடியாத பொது மறை ஒன்றையும் வகுத்துத் தந்த வள்ளுவருக்கு, குறிப்பிட்ட நாள் ஒன்றை விடுமுறையாக்க இயலாது என்பது சிறந்ததோர் வாதமாகாது!

தங்கள் வாழ்விற்கு உகந்த உன்னத கருத்துக்களை சொல்லிய பெருந்தகையாளரைப் பாராட்ட, நாள் ஒன்றை நிச்சயிப்பதில், வரலாறு தடையாக நிற்பதில்லை!

உத்தமர்களைப் பாராட்டும் மனப்பான்மையும், தாய்மொழிப் பற்றும், பல்லாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து மறைந்த பேரறிஞர் ஒருவரின் பிறந்த நாளை நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நேரத்தில் கொண்டாடி மகிழ்வதால், தமிழ் மொழியின் மேன்மையை உலகறிய எடுத்துச் சொல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அரசியலாரிடம் காணப்பட்டால், வள்ளுவர் விழாவிற்கு நாள் குறிக்க வழி இருக்கிறது! வரலாறு தடையாக நிற்காது!!

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் சிலர் கம்பனைப் பற்றிப் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததென்று எண்ணினார்களோ என்னவோ, அவர்களில் கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர், 'வள்ளுவர் விழா கொண்டாடப்படுவது போல், அவர் போன்ற மற்ற தமிழ்ப் புலவர்களுக்கும் விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுமா?' என்று கேட்டிருக்கிறார்.

இக்கேள்வி, 'கம்பனுக்கு விழா கொண்டாட ஏற்பாடு செய்யுங்கள்,' என்று கேட்க விரும்பியதின் பிரதிபலிப்பாக இருக்கலாம்!

சர்க்கார் தரப்பில் பதில் அளித்த அமைச்சர் அவர்கள் 'என்னுடைய கருத்துக்கு எட்டிய வரை வள்ளுவரைப் போன்ற சிறந்த தமிழ் மேதை யாரும் இல்லை,' என்று கூறினாராம்!

கம்பன் காவிய வல்லுநன், கருத்துக் குயில், மக்கள் கவிஞன், மகா மேதை என்றெல்லாம் காவடி சேவகம் செய்யும் கம்யூனிஸ்டு நண்பர்கள், அமைச்சரின் இந்த பதிலைக் கேட்டு என்னென்ன நினைத்தார்களோ!

கம்பனின் மீது அவர்களுக்கு அவ்வளவு பக்தி வளர்ந்திருக்கிறது! கம்பனின் கவிதையில் மார்க்சீய தத்துவம் மறைந்து கிடக்கிறது என்று கூறி, அதை வெளியே எடுத்து மக்கள் மன்றத்தின் உயர்வுக்காக அளிப்பதையே பெரியதோர் இலக்கிய சேவையாக, மக்களுக்குச் செய்யும் பணியாக கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர்போலும்!

கம்ப இராமாயணத்தை மார்க்சீய இலக்கியம், புரட்சிக் கருத்துக்களை கொண்ட வரலாற்றுக் காவியம், புதுமைக் காவியம் —என்று பேசும் அவர்கள், சட்டசபையில் வள்ளுவருக்கு விழா கொண்டாடுவது பற்றி விவாதிக்கும்போது எங்கே தங்களது 'மக்கள் கவிஞனை' ஊர்மக்கள் மறந்துவிடுகிறார்களோ என்று 'மற்றவர்களுக்கும் இதுபோன்ற விழாக்கள் கொண்டாட ஏற்பாடு உண்டா?' என்று அறிய முனைந்திருக்கிறார்கள்!

பக்தி என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! சிலருக்கு புலவர்களுடன் பழகுவதால் மட்டுமே அவர்கள் மீது பக்தி ஏற்படும்; பலருக்கு, நல்ல கருத்துக்களை நானிலத்திற்கு கூறிச் சென்றார்கள் என்பதற்காக மட்டுமே அவர்கள் மீது பக்தி ஏற்படும்; ஆனால், நம் நாட்டில் உள்ள கம்யூனிஸ்டுகளுக்கு, மேடையில் பெயரைச் சொல்லவும் இலக்கியத் துறையிலும் தாங்கள் சேவை செய்வதை மக்களிடம் காட்டிக் கொள்ளவும் ஏதாவது ஒரு கவிஞரின் பெயர் அவர்களுக்குத் தேவைப்பட்டது; அந்தத் தேவையின் காரணமாக ஏற்பட்டதுதான் கம்பனின் மீது கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு ஏற்பட்டிருக்கும் திடீர் பக்தி!

கம்யூனிஸ்டுகள் தாங்கள் போற்றிப் புகழ்ந்திருக்கும் மக்கள் கவிஞன், தான் பிறந்த நாட்டின் மேன்மை பற்றிப் பாடியிருக்கிறானா, அந்த மக்கள் கட்டிக் காத்த கலாசாரம் உயர்வு பெறும் வகையில் காவியம் இயற்றியிருக்கிறானா என்பதை எல்லாம் கவனியாது, கம்பனின் மீது பக்தி கொண்டு சட்டசபை என்றாலும், பொதுமேடை என்றாலும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், அவன் புகழ்பாட முனைகிறார்கள் என்றால், அது கம்பனுக்கு அடித்திருக்கும் யோகம்தானே!

சென்ற வாரத்தில்....!

ஜினீவாவில் நடைபெற்ற இந்தோ-சீனப் போர் நிறுத்த மாநாடுகள் முடிவடைந்தன என்ற செய்தி கேட்டு உலகம் நீண்டதோர் பெருமூச்சுவிட்டது. வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் அவசரம் அவசரமாகத் தங்கள் தலைநகரங்களுக்குத் திரும்பிச் சென்றனர். பாரிஸ் நகரம், போரில் வெற்றி பெற்று வாகை சூடிவரும் வீரனுக்கு அளிப்பது போன்ற வரவேற்பு ஒன்றை பிரதமர் மெண்டஸ் பிரான்சுக்கு அளித்தது. மெண்டஸ் பிரான்சின் வரவேற்புகளுடன் இந்தோ-சீனப் பிரச்னை முடிவுபெறவில்லை. போர் நிறுத்தம் ஏற்பட்டுவிடும் என்றவுடன் நீண்டதோர் பெருமூச்சுவிட்ட உலக மக்கள் ஆவலுடன் டில்லியின் மீது கருத்தைச் செலுத்த ஆரம்பித்தனர்.

☆

இந்தோ-சீனப் போர் நிறுத்தக் கமிஷனுக்கு இந்தியா தலைமை வகிப்பதால் ஜினீவா பேச்சுவார்த்தைகள் முடிவுற்றவுடனேயே போர் நிறுத்தக் கமிஷனின் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. கொரியப் பிரச்னையில் தலையிட்டு கொரிய போர் நிறுத்தத்தை மேற்பார்வையிட்டு, கைதிகளைத் திருப்பி அனுப்பும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட இந்தியாவினால் இந்தோ-சீனப் பிரச்னைகளைத் தீர்ப்பது சுலபமான காரியம் — அந்தக் காரியத்திற்குத் தகுதியான நாடு என்றெல்லாம் இருவல்லரசுகளும் நம்புகின்றன; ஆனால், கொரிய ஒப்பந்தத்தைக் 'கிழித்தெறிய விரும்புகிறேன்,' என்று சிங்மென் ரீ கொக்கரிக்கிறார்!

இந்தியா இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு வியட்மின், வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளின் எதிர்காலத்தை உருவாக்க முனையும் பொறுப்பாகும்.

நூற்றுக்கணக்கான இந்திய அதிகாரிகளை இந்தோ-சீனாவிற்கு அனுப்பி, மக்களின் பணத்தை செலவிடுவதால் மட்டுமே, இந்தியா தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் வேலையை சரிவரச் செய்து விட்டதாகாது.

இந்தோ-சீனாவில் தங்கள் ஆதிக்கம் இனி நடைபெறாது என்று உணர்ந்து கொண்ட அமெரிக்க வல்லரசு எந்த நேரத்திலும் மீண்டும் அங்கே கொந்தளிப்பை உண்டாக்கி, உள்ளே நுழையலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்திய சர்க்கார் இப்பிரச்னையில் எவ்வாறு திறமையுடனும், மற்ற நாட்டு மக்கள் பார்த்துப் பாராட்டும் அளவிற்கும் நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பது காலம் போகப்போகத்தான் தெரியும்!

☆

அமெரிக்கா ஒரு யோசனை கூறினால் அதையொட்டி ரஷ்யா ஒரு யோசனையைக் கூறுவது வழக்கமாகக் காணப்படும் செய்தியாகும். அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டு ஆதரிக்கப்படும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம்' ஒன்று தேவை என்னும் திட்டத்திற்கு மாற்று திட்டமொன்றை ரஷ்யா வல்லரசுகளிடம் தந்திருக்கிறது. ஐரோப்பிய பாதுகாப்பு மாநாடொன்றைக் கூட்டவேண்டுமென்றும், அதில் சீனப் பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும் என்ற ரஷ்ய திட்டத்தைக் கண்டு அமெரிக்க, பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்கள் திகைத்துப் போயுள்ளன.

☆

உலக சமாதானத்திற்குத் திட்டங்கள் தீட்டும் உரிமை அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் மட்டுமல்ல; எனக்கும் உண்டு,' என்று நேரு முன்வந்திருக்கிறார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'சீட்டோ' என்னும் தென் கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு மாற்றுத் திட்டமொன்றை பண்டித நேரு தயாரிக்கிறார் என்று பொதுவாகக் கூறியுள்ளனர். பண்டிதர் சமர்ப்பிக்கும் புதிய திட்டம் என்னவென்று செப்டம்பரில் நடைபெறுவதாக இருக்கும் 'கொழும்பு அரசுகள் மாநாட்டில்'தான் தெரியுமாம்!

ஜினீவாவிலிருந்து பாரிஸ் திரும்பிய மெண்டஸ்பிரான்ஸ் வரவேற்புகளில் மகிழ்ந்து மயங்கிவிடவில்லை. பிரான்சின் காலனிகளுக்கும் சுதந்திரம் வழங்குவதில் முனைந்திருக்கிறார். டுனிஷியாவுக்கு சுயாட்சி வழங்கியிருக்கிறார்; பிரெஞ்சிந்தியப் பகுதிகளிலிருந்து வெளியேறவும் திட்டமிட்டுவிட்டாராம்! உள்நாட்டு அரசியல் வாதிகள் சிலரின் எதிர்ப்புக்களிடையே மெண்டஸ் பிரான்ஸ் உறுதியுடன் பணியாற்றி உலக மக்களிடையே நல்லவர், நற்பண்புகள் உடையவர், காலனி ஆதிக்கத்தைக் கைவிட்டு அதன் மூலம் பிரிட்டனைப் போல் காலனி நாடுகளிடையே மதிப்பை உயர்த்த முயற்சிப்பவர் என்றெல்லாம் அவர் போற்றப்படுகிறார்.

☆

பாரிசிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வருகின்றபோது லிஸ்பனிலிருந்து பயமுறுத்தும் பேச்சுகளும், அறிவு முதிர்ச்சி பெறாத அரசியல் வாதிகளின் கொக்கரிப்புமே கேட்கின்றன.

இந்தியப் பகுதிகளிலிருந்து போர்ச்சுகீசியர்கள் வெளியேற மாட்டார்களாம். 'அப்படி நேர்ந்தால், கிழக்கு அனைத்தையும் அழிப்போம்,' என்கிறார் கோவா கவர்னர்! சிறு திட்டுகளின் ஆதிக்கம் நீடிக்க விரும்பி போர்ச்சுகீசியர்கள் உலகின் கெட்ட பெயர் வாங்குவதுடன், சரியான பாடமும் பெறுவார்கள் என்று தெரிகிறது.

☆

போர்ச்சுகீசியர்கள் தான், இந்திய இணைப்பு வீரர்களை 'காலிகள், கூலிகள்' என்று தூற்றுகிறார்கள் என்று எண்ணினோம்; இப்போது தென் ஆப்பிரிக்க வெள்ளை அரசியல் வாதிகள் இந்தியர்கள் மீது வசைமாரி பொழிகிறார்கள். டிரான்ஸ்வால் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஜே. டி. ஸ்ட்ராக் என்னும் வெள்ளையர், விஜயலட்சுமி பண்டிட்டை 'கூலிப் பெண்' என்று பொதுக் கூட்டமொன்றில் கூறினாராம்; 'சேம்பாடல்' என்ற பத்திரிகை, வெள்ளையர்களின் இந்த அநாகரீகப் போக்கைக் கண்டித்திருக்கிறது. [illegible] சட்டசபை வெள்ளை உறுப்பினரான காப்டன் பிரிக்ஸ் என்பவர், 'இந்தியர்கள் கெனியாவை தங்கள் காலனியாக மாற்ற முயற்சிக்கிறார்கள்,' என்று குற்றம் சாட்டியதுடன் 'இந்த நாட்டில் உள்ள சூழ்நிலைகள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை,' என்றும் கூறினார். இது பிரிட்டிஷ் நாடு என்பதை, அவர்கள் மறந்தே விடுகிறார்கள்! 'இங்கே உள்ள நிலைமைகளை அவர்கள் விரும்பவில்லை என்றால், அவர்கள், இந்தியாவுக்கே திரும்பிப் போகலாம்,' என்றும் பொதுக் கூட்டமொன்றில் அவர் பேசினாராம். ஆப்பிரிக்காவில் எந்த அளவு ஆதிபத்திய திமிர் வளர்ந்து நிற்கிறது என்பதற்கு, இது ஒரு உதாரணம்!

—சிவம்.

கழகச் செய்திகள்

சென்னை 7-வது வட்ட தி. மு. கழகம்

1—8—54ல், தோழர்கள் : கே. எம். கண்ணபிரான் தலைமையிலும், சி. ஆர். பாலசுந்தரம் முன்னிலையிலும், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :- வெ. வ வேந்தன் செயலாளராகவும், ஏ. சு. மணி துணைச் செயலாளராகவும், ல. கணேசன் பொருளாளராகவும், வெ. வ. வேந்தன், தே கா. ஆண்டகை மாவட்டப் பிரதிநிதிகளாகவும், மு. மா. முத்து, பே தா இன்மொழி, தெ. அயமணி, ச. அ. சோலைநாதன், சேரன், செயசீலன் வே. மாதவன், ம ரா. ஏழுமலை, வி. கே. மூர்த்தி, கு. இளம் வழுதி, க. இமயவரம்பன் ஆகியோர் நிர்வாகக் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 37-வது வட்ட தி. மு. கழகம்

31—7—54 சனி இரவு 7 மணிக்கு சென்னை இராயப்பேட்டை தி. மு. கழக 37-வது வட்ட கழகப் பணிமனையில் தோழர் கோ. இளவரசு தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, இரண்டு மாத வரவு - செலவு கணக்கை பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், கழகத்தின் 4-ம் ஆண்டு விழாவை செப்டம்பர் மாதம் 2-வது வாரத்தில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

உ. வெங்கடேச நல்லூர் தி. மு. க. ஆரம்பவிழா

20—7—54 மாலை 5 மணிக்கு தோழர் வி. ஆர். மணி தலைமையில் ஆரம்ப விழா நடைபெற்றது. தோழர் என். ஆர். முருகையன் தி. மு. கழக கொள்கைகளைப் பற்றிப் பேசினர்.

* * *

22—7—54ல், தோழர் என். ஆர். முருகையன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் க. நரசிம்மன் செயலாளராகவும், வ. சாமிநாதன் துணைச் செயலாளராகவும், வை. பழனிசாமி பொருளாளராகவும், சி. கிருட்டிணன், ப. கந்தன் மாவட்ட கழக உறுப்பினர்களாகவும், மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொள்ளாச்சி தி. மு. க.

3—8—54ல், கழக செயற்குழு கூட்டம் தோழர் அ. ச. பாலு தலைமையில் கூடி. மொழிப்போரில் தமிழகம் போராட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது. நகரில் உள்ள மஜீத் பீடி கம்பெனியின் தொழிலாளர்கள் பிரச்சினைகளைக் கவனித்து ஆவன செய்ய தோழர்கள் பி என். இராமானுஜம், எம். ஜி. சிதரன் ஆகிய இருவரையும் நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கணியூர் தி. மு. கழகம்

2—8—54-ல், தி. மு கழகக் கமிட்டிக் கூட்டம் அழகிரி மன்றத்தில் தோழர் எம். கணபதி தலைமையில் நடைபெற்றது. அதுபோது இங்கு நடைபெறும் கொடிக்கால் தொழிலாளர், கூலியாட்கள் குறைகள், குத்தகை ஏற்றம் முதலிய குறைகள் விவாதிக்கப்பட்டு இது சம்பந்தமாய் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. சட்ட மன்றத்தில் எடுத்து கூறுமாறு தி. மு. கழகச் சார்பில் கேட்டுக்கொண்டு மகஜர் ஒன்று அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உ. தா. வீரசோழபுரம் தி. மு. கழகம்

31—7—54 காலை 10 மணிக்கு கார்த்திபவன் சிற்றுண்டி விடுதி யுத்தமன்னம் அரங்கநெடுமாறன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : அ. நல்லதம்பி ; துணைச்செயலாளர்கள் : மு.காசிநாதன், கே. என். மணி; பொருளாளர் : சி. அரங்கநாதன் ; மாவட்ட பிரதிநிதி : இ. அரங்கநாதன் ; செயற்குழு உறுப்பினர்கள் : டி. சந்திரகாசன், அ சென்னுசாமி, எஸ். சிவப்பிரகாசம், த. சிங்காரம், சி. தங்கராசு, க. சிதம்பரம், எஸ். இராஜகோபால்.

தொரவலூர் தி. மு. க. துவக்க விழா

27—7—54ல், விருத்தாசலம் தோழர் சி. முனுசாமி தலைமையில் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் என். பூமாலை, கே. ஜி. சாமிநாதன், தொ. பிச்சமுத்து ஆகியோர் கழக லட்சியங்கள் பற்றிப் பேசினர். பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— எம். தங்கவேலு ; செயலாளராகவும், என். கோவிந்தசாமி துணைச் செயலாளராகவும், எம். ரெங்கசாமி பொருளாளராகவும், எ பெரியசாமி துணைப் பொருளாளராகவும்; டி. நடராசன், என். நடராசன், மாவட்ட பிரதிநிதிகளாகவும், க, தங்கவேலு, ப. ஆறுமுகம், க. பூமாலை, ப. மனோகரன், கு. நடராசன், மா வேணுகோபாலன், மு கலியன், கொ. பெரியசாமி செயற்குழு உறுப்பினர்களாகவும், வெ ராமசாமி, வை. மன்னுங்கட்டி, ரா. ஆறுமுகம், ப. தருமலிங்கம், சா. கோவிந்தராசு, பெ. கண்ணன், பூ. ராமசாமி, மு கோவிந்தசாமி, ரு. வீரமுத்து, அ. பிச்சமுத்து, கணபதி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது — பொதுப்பாளர்.

அருப்புக்கோட்டை தி. மு. கழகம்

31—7—54 மாலை 9-30 மணிக்கு நடைபெற்ற தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் செயலாளர் பி. எம். சிவனச்சாமி விலகல் கடிதம் ஒப்புக்கொள்ளப்பட்டு, தோழர் சு நடராசன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைச் செயலாளர் பதவிக்கு தோழர் மா. பொன்னுசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், அண்மையில் நடைபெற்ற இரண்டு பொதுக் கூட்டச் செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

சாத்தான்குளம் தி. மு. க.

1—8—54 இரவு 7 மணிக்கு கழக அலுவலகத்தில் தோழர் செல்லையா தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்; கே. சேர்மத்துரை ; துணைச் செயலாளர்கள் : என். சி. செல்வன், எம்பி. வெள்ளைமாலை ; விளம்பர உறுப்பினர் : என். வி. சேகர் ; பொருளாளர் : வி. கா. கிருஷ்ணன் ; மாவட்டப் பிரதிநிதியாக கே. சேர்மத்துரை ; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அத்திப்பாளையம் தி. மு. கழகம்

1—8—54 மாலை 6½ மணிக்கு கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் இரா.தாமோதரன் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையினை தலைவர் விளக்கிப் பேசினர். பின்னர், சில முக்கிய முடிவுகள் செய்யப்பட்டன.

பொன்மலை மே. க. கோட்டை தி. மு. கழகம்

1—8—54ல், கழக அலுவலகத்தில் எ. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தோழர் கல்யாண சுந்தரம் குமாரர் அருணாசலம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டதுடன், ஆகஸ்டு மாத இரண்டாவது வாரத்தில் ஈ. வெ. கி. சம்பத் திருச்சி மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது கழக சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

திருப்பூர் நகர தி. மு. க.

25—7—54 காலை 11 மணியளவில் தோழர் டி. நடராசு தலைமையில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, செயலாளராக கே. நடராசனும், துணைச் செயலாளராக ஆர். பாலசுந்தரமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் மணப்பாறை குமாரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

தி.மு.க.பொதுக்கூட்டங்கள்

★

ஸ்ரீவைகுண்டம்

25—7—54ல், புதுக்குடி ஆற்றுமணலில், கழகச் சார்பில் தோழர் ஜெகவீர ராஜேந்திரம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது தலைவர் பேசுகையில், கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் விவசாய சங்கங்கள் அமைக்க ஏழை விவசாயிகளைப் பலமுறை பலாத்காரமாக சங்கத்தில் சேரச் சொல்வதைக் கண்டித்தார்.

தோழர் சிங்கை கந்தசாமி பேசுகையில் ஜனநாயகத்திற்கு விரோதமாக ஆச்சாரியாரால் அழைக்கப்பட்ட புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஒழித்த முதல் மந்திரி காமராசரைப் பாராட்டியும், கம்யூனிஸ்டு கட்சியின் போக்கைக் கண்டித்தும் பேசினர்.

அடுத்துத் தோழர் நடராசன் பேசிய பின்னர், கவர்னரின் சம்பளத்தைக் குறைக்கவேண்டும், நிலச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும், இலங்கை—இந்தியர் பிரச்னை தீர வழிவகுக்க வேண்டும்—என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

★

தென் திருப்பேரை

28—7—54 இரவு 9 மணிக்கு இவ்வூர்மணல்மேட்டில் குருகாட்டூர் தி. மு கழக சார்பில் தோழர் இல. அறவேந்தன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது சாத்தான்குடி தோழர் கே. வி. கே. சாமி விரிவுரையாற்றினர்.

முத்துகிருட்டினபுரம்

26—7—54 இரவு முத்துகிருட்டிணபுரம் திடலில், கடையநல்லூர் தி. மு கழக சார்பில் தோழர் எஸ். எஸ். சாகுல் அமீது தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத் துவக்கத்திற்கு முன்னால் முத்துகிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றத்தில் தோழர் எம். எஸ் ராமசாமி கழகக் கொடியை ஏற்றிவைத்தார். பொதுக் கூட்டத்தை துவக்கி வைத்துத் தோழர் சி. நடராசன் பேசியபின் தலைவர் முன்னுரையை அடுத்து தோழர் எம். எஸ். ராமசாமி திராவிட நாடு பிரியவேண்டியதின் அவசியம் குறித்தும், வட நாட்டு ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் சிலர் மேடை மீது ஏறிக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தனர்; எனினும் கூட்டம் அமைதியாக முடிந்தது. அதைத் தொடர்ந்து இரவோடு இரவாக (முத்துகிருட்டிணபுரம்) திடலில் பறந்து கொண்டிருந்த கழகக் கொடி இறக்கப்பட்டு கிழிக்கப்பட்டிருந்தது. இச்செய்தி போலீசுக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★

இராசிபாளையம்

29—7—54 மாலை 7 மணிக்கு இராசிபாளையம் சாவடி மைதானத்தில் தோழர் கோவிந்தசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். என். அற்புதசாமி, சண்முகசுந்தரம், கல்லடம் பொன்னுசாமி, என். அப்பாவு, ஈ வெ. கி. சம்பத் ஆகியோர் தி மு கழகக் கொள்கைகள் குறித்தும், தனிநாடு தேவை குறித்தும் பேசினர்.

★

உடுமலை

31—7—54 மாலை 7 மணிக்கு உடுமலைப்பேட்டை ப்ரபோ தியேட்டர் அருகிலுள்ள மைதானத்தில் தி மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ் ஏ ராசமாணிக்கம், என் அப்பாவு, ஈ வெ. கி. சம்பத் ஆகியவர்கள் கழகக் கொள்கைகள், மத்தியசர்க்காரின் போக்கு மாற்றுக் கட்சிகளின் நிலை தனிநாடு தேவை ஆகியவைகள் குறித்தும் பேசினர்.

★

கொத்தமங்கலம்

31—7—54ல், தி. மு. கழகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. அடைக்கலம் தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே எஸ். சிவராமகிருஷ்ணன், பி. வடிவேலு, வி. எஸ். மணி, ஒக்கூர் மீரா ஆகியோர் தி. மு. கழக கொள்கைகளை விளக்கி சொற்பொழிவாற்றினர். கேள்விகளுக்கெல்லாம் மீரா சன்முறையில் பதிலளித்தார். கூட்டம் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. அன்று பகல் 3 மணிக்கு தோழர் க. சின்னையா தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. தோழர் எ. வி. துரைசாமி தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

★

பஞ்சநதிகுளம்

4—8—54 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் பஞ்சநதிக்குளம் மேலச்சேத்தி மாரியம்மன் கோவில் திடலில் தோழர் த. பண்டரிநாதன் தலைமையில் செம்பலம் தோழர் டி. எஸ். கலியாணசுந்தரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியபின், முற்போக்கு கலா மன்றத்தாரின் கலா நிகழ்ச்சி நடைபெற்றது.

கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் கருத்துரை

கவர்னருக்கு இப்போது தரப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் சரிதானா? அதைக் குறைக்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்று தி. மு. கழகப் பொதுச் செயலாளர் கூறியது தவறா? என்பது பற்றி வாசகர்களை 'கருத்துரை அளியுங்கள்' என்று கேட்டிருந்தோம். கருத்துரைகள் கொண்ட கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன! அவைகளில் சில முன்னர் வெளியிட்டிருந்தோம், தொடர்ந்து இன்றும் வெளியிடுகிறோம்!

★

ஐயா,

சென்னை மாநிலத்தில் உள்ள ஏராளமான கிராமங்களுக்கு வைத்திய வசதி, பிரசவ வசதி, கல்வி, நல்ல போக்குவரத்து பாதைகள் இந்த குறைகளை நீக்க பணம் இல்லை என்று சொல்லும் சென்னை அரசாங்கம், கிராமங்களின் முன்னேற்றமே சுதந்திர இந்தியாவின் முன்னேற்றம் என்று கருதும் அரசாங்கம் ஒரு போலீஸ்காரன் வேலையைவிட நான் குறைவாகத்தான் வேலை செய்கிறேன் என்று சொல்லிய சென்னை கவர்னருக்கு பல லட்சக் கணக்கான ரூபாய்களை சம்பளமாக கொடுப்பதை குறைக்கத்தான் வேண்டும்! இல்லாவிட்டால் போராட்டம் தேவை விரைவில்!

ஏ. எஸ். ஏ. சாமி
குளேசவரன்பட்டி

ஐயா,

நம் மாநில கவர்னர் பிரகாசாவுக்கு சம்பளம் என்ற பெயரால், மக்களின் வரிப்பணம் ஏறத்தாழ ரூ. 10 லட்சம் அவரின் ஆடம்பரத்திற்கு அள்ளி வழங்கப்படுகிறது!

இக்கொடுமையை நாம் இனியும் அனுமதித்துக் கொண்டு ஊமையாக, ஆமையாக வாளா இருப்பதா? கூடாது!

போராட்டம் மிக மிக அவசியம் தேவை! மக்கள் சோற்றுக்கு வழியற்று வீதியிலே பிணமாகும் போது, கவர்னர் சம்பளம் என்ற முறையில் பல லட்ச ரூபாய் பாழாக்கப்படுகின்றன. இதை இன்னும நாம் பொறுக்க முடியாது.

கவர்னரின் சம்பளத்தை நாம் எதிர்க்கும் முகத்தான் சர்க்காரின் வெளியீடுகளான "பெஜட்" போன்ற பிரசாரங்களை சட்டசபை முன் கொளுத்தி நம் எதிர்ப்பை ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவரும்படியான ஓர் போராட்டம் நடத்த வேண்டும் என நான் அவாவுகிறேன்.

அரவழகன்
மதுரை

ஐயா,

'இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லையே,' என்பதல்ல பிரச்சினை! கவர்னர் சம்பளம் கொள்ளைபோல் கொடுக்கப்படுகிறது. இது அவசியமா, இப்போது? இதுதான் கேள்வி! விருப்பமில்லாதோர் இந்திய அரசியல் சட்டத்தின் இடுக்குகளில் ஒடி ஒளிந்து கொள்ளட்டும்! வீரர்கள் வீட்டைவிட்டு வெளிவந்து அறப்போர் அணிவகுப்பில் சேரட்டும்!

மேகநாதன்
மேட்டூர் அணை

ஐயா,

'கவர்னர் என்று ஒருவர் தேவையுமில்லை; வேலையுமில்லை' என்று, கவர்னர் பிரகாசா ஓர் பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார். அவருக்கே அவரது வேலையைப்பற்றி மோசமாகத் தெரிகிறது. ஏழ்மையில் உழலும் இந்த நாட்டில், ஒரு வேலையுமற்ற கவர்னருக்கு மாதம் ரூ. 90,000 தேவையுமல்ல; கொடுக்கப்படவும் கூடாது. தீர்மானங்களாலோ, பொதுக் கூட்டங்களாலோ, கவர்னர் சம்பளம் குறைக்கப்பட்டு விடாது; போராட்டத்தால்தான் குறைக்க முடியும்!

அரு இராமநாதன்
திருப்பாதூர்

இந்திரனே! சந்திரனே!......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது :—

"தாம்பரத்தின் இவ்வூருக்கு நான் நெடுநாட்களுக்குப் பிறகு இன்று வந்துள்ளேன். இந்தப் பகுதிக்கு, செங்கற்பட்டு மாவட்ட கழகத்தார், 'பெரியார் ராமசாமி நகர்' என பெயரிட்ட சமயத்துக்கு ஒருமுறை இங்கு வந்திருந்தேன். அன்றிருந்த நிலையிலிருந்து உருமாறி வளர்ந்துள்ள இன்றைய நிலையில் இரண்டாம் முறையாக வந்துள்ளேன். இந்த வாய்ப்பு கிடைத்தமைக்கும் பெரிதும் மகிழ்கிறேன்.

பல்லாயிரக்கணக்கில் இங்கு கூடியுள்ள மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இதர கட்சியினருக்கும் உள்ள ஒரு அடிப்படை வித்தியாசத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மற்ற கட்சியினரெல்லாம் மக்களைப் புகழ்ந்து பேசுவார்கள்; பாராட்டுவார்கள்; மக்களை எல்லாம் தேர்ந்தவர்கள் என ஏற்றிப் போற்றுவார்கள்; ஞானவான்கள், என்றும் புகழ்வார்கள்.

ஆனால், திராவிடர் இயக்கத்தாரோ ராசிய காங்கள்தான், மக்களின் குறைபாடுகளை, அவர்களைக் கப்பிக் கொண்டிருக்கும் அறியாமையை; அவர்களை மூடிக் கிடக்கும் மூட வைதீக மத நம்பிக்கைகளை எடுத்துக் காட்டி அவர்களிடை உள்ள குற்றம் குறைகளை விளக்கி எச்சரிப்பவர்கள்!

ஒரு நண்பர் இவ்வூரு [illegible] பார்க்கும்போது அவர்மாசிறந்தவராகவும், 'சிறந்த கிறமாயிற்றே' என்று புகழ்ந்து கூறினால், அந்த நண்பர் மனமகிழ்வு கொள்ளாமலிருக்கமாட்டார்!

ஆனால், அதே மனிதனை நாடியைப் பிடித்துப் பார்த்து, காசநோய் வரக்கூடும் என்றும், கண்களை விரித்துப் பார்த்து மஞ்சள் காமாலை வரலாம் என்றும், கால்களைத் தடவி, வீக்கம் இருப்பதைக் கண்டு வாதசுரம் வரலாம் என்றும் கூறும் டாக்டர் மீது கோபப்படமாட்டாரா, அந்த மனிதர்?

அதைப் போலவே தான் மற்றக் கட்சியினர் மக்களைப் பாராட்டிப் பேசி [illegible] போகிறார்கள்; [illegible] டாக்டரைப் போல, 'மக்களிடம் படிப்பு வளரவில்லை; [illegible] அறியும் தெளிவு பெறவில்லை; ஆராயும் திறன் [illegible] இல்லை; தரித்திரம் [illegible] தலைவிரித்தாடுகிறது,' [illegible] என்றெல்லாம் குறைகளைக் கூறுகிறோம்; எச்சரிக்கிறோம்; [illegible] எடுத்துக் காட்டுகிறோம்!

உண்மையை நாங்கள் சொல்லும்போது உங்களுக்குக் கசப்பாகத்தான் [illegible] இருக்கும். உடலில் உள்ள [illegible] களைச் சுட்டிக் காட்டி [illegible] வைத்தியம் செய்யும் டாக்டர் [illegible] போலவே, சமூகத்தில் உள்ள சீர்குலைவு [illegible] களை எடுத்துக் காட்டி [illegible] சரிசெய்யவேண்டும் என்று கூறுகிறோம் நாங்கள்!

"இந்த நாட்டின் சமுதாயம் இவ்வளவு மலிவு பட்டு இழிவுபட்டுப் போயிருப்பது வேறு எந்த நாட்டிலேனும் உண்டா? சாதிச் சழக்குகளும், மூட நம்பிக்கைகளும், உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவு இந்த நாட்டிலேதானே அதிகம்?"

என்று பொதுச்செயலாளர் அவர்கள் திராவிடச் சமுதாயம், சீர்திருத்தப்பட வேண்டிய சீர்கெட்ட நிலையில் இருப்பதையும், அவற்றை மாற்றத்தான் சீர்திருத்த இயக்கம் என்பதையும் விளக்கிவிட்டு, நாட்டு முன்னேற்றம்; மக்கள் ஒற்றுமையாய் கட்டுப்பாடான ஒழுங்குமுறையுடன் வாழ்ந்தால்தான் ஏற்பட முடியும் என்பதையும் விளக்கிவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—

"இந்த நாட்டவரைப் போல் உழைப்பவர் வேறெங்கணும் இல்லை; எங்கேயும், இந்த நாட்டைப் போல் தரித்திரம் தலைவிரித்தாடுவதும் வேறெங்கணும் இல்லை; ஏன்?

உலகத்தில் உள்ள வேறெல்லா நாட்டவரும், இந்த நாட்டு மக்களைக் காட்டிலும் குறைவாக உழைக்கிறார்கள்; என்றாலும் அவர்கள் வாழ்கிறார்கள், நாம் அதிகமாக உழைத்தும் வாழ முடியவில்லை; என்னைப்போன்ற கேள்வி கேட்டு நியாயமான விடை காண எந்தக் கட்சியினரும் மக்கள் மன்றத்தில் நல்ல வழி [illegible] காட்டிவிட முடியாது.

பாரதியார் பாடிய பலன் [illegible] பாட்டாளியை, 'ஏழையாய் உன்னால் வாழ முடியவில்லை!' என்று [illegible], அவன், 'ஆட்டுக் குட்டிக்கும் ஆண்டவன் அளந்துதானே வைத்திருக்கிறான்; அதைப்போலவே எனக்கும் இவ்வளவுதான் வாழ்வு என்று என் தலையில் அவன் எழுதிவிட்டானே! நான் செய்ய? என்று தானே சொல்லுகிறான்?

கொஞ்சம் தெளிவு பெற்ற உழைப்பாளி கேட்டால், அவன் சொல்கிறான்—'விலைவாசிகள் ஏறிப் போயிருக்கின்றன; கிடைக்கிற ஊதியம் போதவில்லை, ஏழையுள்ள [illegible] சமாளித்து சுகமாக வாழ முடியவில்லை,' என்று கொஞ்சம் தெளிவாகப் பேசுகிறான்!

இன்னும் கொஞ்சம் தெளிவுபெற்ற உழைப்பாளியிடம் சொல்லுகிறார்கள் —'நமது [illegible] காரணம் எல்லாம், நாம் உழைக்கிறோம்— [illegible]

[illegible]

சியல் துறையில் இவற்றில் எல்லாம் வேகமாக வளர்ந்துள்ள உலகத்தின் வளர்ச்சியை ஒட்டி நாம் வளரவில்லை என்றுதான்,"

என்று பொதுச்செயலாளர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, அவர், நம் நாட்டு அறிவுத் துறையில் பின்தங்கி இருக்கிற நிலைகளை [illegible] தெளிவாக விளக்கிவிட்டு, தென்னாட்டு மக்கள் மானத்துடன் நிரந்தரமான நல்வாழ்வு பெற வடநாட்டு தொடர்பு குறுக்கே நிற்கிறது என்பதை எடுத்துக் காட்டி, வட நாட்டு ஆதிக்கப் பிடிப்பிலிருந்து விடுபட திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்றுகூறி, திராவிடத்திற்கான ஆதாரங்களையும், வரலாற்று உண்மைகளையும் எடுத்துக் காட்டினார்.

திராவிடம் வடநாட்டிலிருந்து பிரிந்தாலன்றி தென்னவர்க்கு வாழ்வில்லை என்பதை உறுதியிட்டு கேட்டவர் உணரும் வண்ணம் பொதுச் செயலாளர் அவர்கள் லட்சிய விளக்கம் தந்தார்கள்.

°°°°°°°°°°°°°°°°°°°°°°°°°°

கழகக் கூட்டம்

★

சென்னை

மவுண்ட் ரோட், எல்லீஸ் ரோட்டில்

10—8—54 செவ்வாய் மாலை

தலைவர் : கா. பாண்டியன்

பேசுவோர் :

சி. என். அண்ணாதுரை

என். வி நடராசன்

கண்ணதாசன்

°°°°°°°°°°°°°°°°°°°°°°°°°°

தி. மு. க. வீரர்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மத்திய சிறைக்குக் கொண்டு போகப்பட்டனர்.

நகர்கோவில் அறப்போரில் கலந்துகொண்ட மற்ற 59 தோழர்களும் ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி, சுசீந்திரம் ஆகிய மூன்று ஊர்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வழக்கின் முடிவு பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. 2-வது படைக்கு பி. இராமசந்திரன் தலைமை வகித்தார்.

★

செங்கோட்டை மறியல்

திரு—தமிழர் அறப்போர் அடையாள மறியலில் கலந்து கொண்ட தி. மு. கழகத் தோழர்கள் 31 பேரையும் போலீசார் கைது செய்தனர். செங்கோட்டை அறப்போரை தூத்துக்குடி நடராசன் அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்.

தோழர்கள் அனைவரும் 6 குழுவினராக மறியல் செய்தனர்.

இரண்டாவது படை வீரர்களை போலீஸ் வானில் ஏற்றும்போது ஒரு போலீஸ்காரர் தி. மு கழகத் தொண்டர் ஒருவரைப் பிடரியில் கை வைத்து 'வானு'க்குள் தள்ளவே, சுற்றி நின்ற மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது அமைதியை நிலைநாட்ட போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். அதுகண்ட மக்கள், 'அடிக்காதே,' என்று முழக்கமிட்டனர்.

போலீசாரின் இச்செய்கைக்காக போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், தோழர் நடராசன், செங்கோட்டை நகரசபைத் தலைவர் எஸ். ஆர். சவரி பெருமாள் பிள்ளை ஆகியோரிடம் 'வருத்தம்' தெரிவித்துக் கொண்டதுடன் இனி, இம்மாதிரியான சம்பவம் நிகழாமல் பார்த்துக் கொள்வதாக வாக்குறுதி யளித்தார்.

காலையில் கைது செய்யப்பட்ட தோழர்கள் அனைவரும் மாலை வரை போலீஸ் ஸ்டேஷனில் பகல் உணவும் கொடுக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தனர். 4 மணிக்கு மேல் மறியல் செய்த தோழர்கள் தி. மு. கனியா, ஆ திராவிட மணி, மாணிக்கம் ஆகிய மூன்று பேரையும் நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்றனர். இவர்களுக்கு தலா 4-நாள் சிறைத் தண்டனையும், ரூ 10 அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் மூன்று நாள் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது அபராதம் கட்ட மறுத்து, தோழர்கள் சிறைத் தண்டனையை ஏற்றுக்கொண்டனர்.

இவர்கள் அனைவரும் செங்கோட்டை சிறையிலேயே காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

செங்கோட்டையில் கைது செய்யப்பட்ட 31 தோழர்களில் தண்டனை விதிக்கப்பட்ட 3 தோழர்களைத் தவிர, மீதமுள்ள 28 தோழர்களையும், மாலை 6 மணிக்கு விடுதலை செய்தனர்.

இவர்கள் அனைவரும் திரு—நெல்வேலி சர்க்கிள் போலீஸ் - இன்ஸ்பெக்டர் ஜெனாலி... மிருந்து கிடைத்த தகவலின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று தெரிகிறது.

அடையாள மறியலில் கலந்து கொண்ட தி மு. கழகத் தோழர்கள் எவரும் அபராதம் கட்டவில்லை.

திராவிடத்தில் இந்தி அழிப்பு!

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ராமசாமி அவர்கள் அறிக்கைக்கிணங்க, ஆக. 8-ம் தேதி திராவிடமெங்குமுள்ள புகை வண்டி நிலையங்களில் இருக்கும் பெயர்ப் பலகைகளில் பொறிக்கப்பட்டுள்ள இந்தி எழுத்துக்களை திராவிடர்கள் தார் பூசி அழித்தனர். சென்ற ஆண்டுகளைப்போலவே இந்த ஆண்டும் சர்க்காரும் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட ரயில் நிலையங்களில் தாங்கள் எழுதியிருந்த தங்கள் 'தேசிய' மொழியான இந்தியின் முகத்தில், திராவிடர்கள் தார் பூசுவதைத் தடுக்கவோ, தார் பூசிய தோழர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ இல்லை.

இந்தி மொழியின் 'ஏஜண்டுகளான' சிலர் மட்டும் இந்தி அழிப்பை சில சில இடங்களில் தடுக்க முயன்று தோல்வி கண்டிருக்கிறார்கள்.

இந்தி அழிக்கப்பட்ட விவரம் !

தஞ்சை

தஞ்சை ரயில் நிலையத்தின் உள்ள இந்திப் பெயர்களை பெரியார் ராமசாமி அவர்கள் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் புடை சூழ, ஆயிரக் கணக்கான மக்களின் முன்னிலையில், தார் கொண்டு அழித்தார்கள். பின் பொதுக் கூட்டம் ஒன்றில் பெரியார் அவர்கள் 'இந்தியை ஏன் அழிக்கிறோம்' என்பதை விளக்கிப் பேசினார்கள்.

சென்னை

சென்னை எழும்பூர் நிலையத்திலும் சென்னையைச் சுற்றியுள்ள ரயில் நிலையங்களிலும் இருந்த இந்தி எழுத்துக்கள் தோழர்கள் குருசாமி, ராஜாராம் தலைமையில் அழிக்கப்பட்டன. எழும்பூர் போராட்டம் முடிந்ததும் தொண்டர்கள், தனித் தனியாக தாம்பரம், கிண்டி, ஊர், மவெலாஞ்சேரி, பட்டிப்பாக்கம், சிங்கபெருமான்கோவில் முதலிய ஊர்களுக்கு இந்தி அழிக்கப் புறப்பட்டனர். பெரம்பூரிலும் இந்தி அழிக்கப்பட்டது.

இந்நிலையங்களின் இந்தி அழிப்பில் கலந்துகொண்ட தொண்டர்களை, தோழர்கள் டி. எம். சண்முகம், எம். கன்னியப்பன், திருவாரூர் தங்கராசு, 'கோரநாதன்' முதலியோர் அணிவகுத்துச் சென்றனர். எழும்பூரில் தார் பூசப்பட்ட எழுத்துக்களை மண்ணெண்ணெய்க் கொண்டு அழித்த சிலர், திரும்பவும் தார் பூசப்பட்டது கண்டு ஏமாற்றமடைந்தனர்.

திருச்சி :

தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் தலைமையில் இந்தி அழிப்பு நடைபெற்றது. தோழர்கள் 'திருச்சி ஜங்ஷன்' என்று இந்தியில் எழுதியிருந்ததை தார் பூசி அழித்தது கண்ட சிலர், 'திருச்சி ஜங்ஷன்' என்று இந்தியில் அச்சடித்து வைத்திருந்த தாள்களை ஒட்டினார்.

திராவிடர் கழகத் தோழர்கள் அந்தக் காகிதங்களை கிழித்தனர் ; அந்தச் சிலர் மீண்டும் ஓட்டினராம். திரும்பவும் தோழர்கள் இந்தி அச்சடித்த தாள்களை அகற்றிவிட்டு, இந்தி அழிப்பில் வென்றுவிருந்தனர்.

திருச்சி நகர சபை உறுப்பினர் இருவரும், பெண்கள் பலரும் இந்தி அழிப்பில் கலந்து கொண்டனர்.

சேலம்

தோழர் எம் வி. செக்கலிங்கம் தலைமையில் ஆண்களும் பெண்களுமாகச் சென்று ரயில் நிலையத்தில் இருந்த இந்தி எழுத்துக்களை தார்பூசி அழித்தனர்.

கோவை

தோழர் சண்முக வேலாயுதம் தலைமையில் தொண்டர்கள் பலர் கூடி இந்தியின் மீது தார் பூசினர்.

மதுரை

ஏராளமான தோழர்கள் தோழர் மகேசுவரம் தலைமையின் இந்தி அழிப்பில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர்.

குடியாத்தம்

தோழர் கோவிந்தராசன் தலைமையில், இந்தி அழிப்பு வெற்றிகரமாக நடைபெற்றது.

விழுப்புரம்

விழுப்புரத்திலும் இந்திக்கு தார் பூசுவதில் ஏற்பட்ட அமளியைக் கலகமாக்க முயற்சித்த சிலர் முயற்சியும் கலகம் பூசப்பட்டது போன்று மீண்டும் தோழர்கள் இந்தியை தார் கொண்டு அழித்தனர்.

இன்னும், சிதம்பரம், கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ் நாடெங்குமுள்ள ரயில் நிலையங்களில் இருந்த இந்தி தார் கொண்டு அழிக்கப்பட்டு, தோழர்களுக்கு பெரும் வெற்றியைத் தந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இராமசந்திரன் [illegible], எம். ஏ., அவர்கள், அறுபதி அரங்கத்தின் [illegible] பேருந்து நிலைய [illegible] [illegible] அறிஞர் : சி. என். அண்ணாதுரை எம். ஏ.